7. அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, '' பேரவையின் 41 (3) வது விதியின்கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும் '' என்று கோருகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, * * *

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர், உறுப்பினர் கொடுத்த அறிக்கையை படிக்கவில்லை, எதையோ பேசுகிறார், அப்படி பேசுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதா ? வேறு ஏதாவது உறுப்பினர்கள் இஷ்டம்போல் பேசலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே அதை மணி அடித்து தடுக்க இருந்தேன். துரை கோவிந்தராசன் அவர்கள் தயவு செய்து கொடுத்திருக்கும் அறிக்கையை படிக்கவும். அவர் இதுவரையில் படித்ததை எல்லாம் குறிப்பேட்டில் இருந்து நீக்கி விட வேண்டும் என்று உததரவு இடுகிறேன். அவர் இனிமேல் புதிதாக படிக்க ஆரம்பிக்கட்டும்.

8. கவன ஈர்ப்புகள்.

(அ) சித்தமல்லிப் பகுதியில் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, '' தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி தாலூகா சித்தமல்லிப் பகுதியில் சுமார் 16 ஏக்கர் நிலத்தில் விளைந்த 300 மூட்டை நெல் கொள்ளையடிக்கப்பட்டும் வைக்கோல் போர்கள் தீ வைக்கப்பட்டும் தென்னை, வாழை உயிர்வேலி மற்றும் மூங்கில்கள் வெட்டி அழிக்கப்பட்டும் உள்ளதால் அப்பகுதி விவசாயிகளிடையே நிலவும் பதட்ட நிலை குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகினே்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

1979 மார்ச் 17]

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : தலைவர் அவர்களே, சித்தமல்லிப் பகுதி உள்ளூர் கம்யூனிஸ்ட் கட்சி (C. P. I.) தி.மு. கழக உறுப்பினர்கள் கோஷ்டியென்றும், திரு. ஷேக்தாவூத் மற்றும் அவரைச் சேர்ந்தவர்கள் கோஷ்டியென்றும் இரு கோஷ்டி களுக்குமிடையே பகைமையுணர்வு இருந்து வந்தது. கம்யூனிஸ்ட் (C. P.I .) கட்சியின் அனுதாபியாக இருந்த திரு. ஷேக் தாவூத் என்பவர் ஓராண்டிற்கு முன்பு அக்கட்சியிலிருந்து தனது தொடர்பை அறுத்துக் கொண்டார். தி.மு. கழகமும், கம் கம்யூனிஸ்ட் கட்சியும் 23-10-1978-ம் நாளன்று ஏற்பாடு செய்த மாநிலம் தழுவிய '' பந்தில் '' திரு. ஷேக் தாவூத் தனது ஒத்துழைப்பை நல்கவில்லை. 6-1-1979 அன்று ஏற்பட்ட திரு. எஸ். ஜி. முருகையன், எம்.பி., அவர்களுடைய கொலை நிகழ்ச்சிக்குப் பின்னர் திரு. ஷேக்தாவூத் அவர்களுக்குச் சொந்த மான தென்னை, வாழைத் தோப்புகளை அழித்தல், அவருடைய நெல் களவாடப்படுதல் ஆகிய நிகழ்ச்சிகள், 22-1-1979-க்கும் 25-2-1979-க்கும் இடைப்பட்ட காலத்தில் அடிக்கடி நடை பெற ஆரம்பித்தன. வைக்கோல் போர் ஒன்றும் தீக்கு இரை யாக்கப்பட்டிருக்கிறது. மொத்த சேத மதிப்பு ரூ. 10,000 வரை இருக்குமென மதிப்பிடப்படுகிறது. இது தொடர்பாக பெருகவழத்தான் காவல் நிலையத்தில் கீழ்க்கண்ட ஒன்பது வழக்குகள் பதிவாகியுள்ளன.

குற்ற எண். 2/79	.. ..	இ.பி.கோ. பிரிவு 379.
குற்ற எண். 8, 11, 14/79	..	இ.பி.கோ. பிரிவு 147, 447, 379.
குற்ற எண். 18/79	.. ..	இ.பி.கோ. பிரிவு 435.
குற்ற எண். 20, 23/79	..	இ.பி.கோ. பிரிவு 147, 447, 379, 427.
குற்ற எண். 24/79	.. ..	இ.பி.கோ. பிரிவு 379, 427.
குற்ற எண். 26/79	.. ..	இ.பி.கோ. பிரிவு 147, 447, 379.

திரு. ஷேக் தாவூத், சந்தேகத்தின் பேரில் குறிப்பிட்ட நபர் களை விசாரணை செய்யப்பட்டு ருசுவாகவில்லை. இந்நிகழ்ச்சி கள் இரவில் நடை பெற்றமையாலும், நேரடி சாட்சிகள் இல்லா மையாலும், இது வரை யாரும் கைது செய்யப்படவில்லை. இவ்வழக்குகள் புலன் விசாரணையில் இருக்கின்றது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்